# වාර්ෂික වාර්තාව

# ஆண்டறிக்கை

# ANNUAL REPORT 2015

## ඉඩම් මැනුම් සභාව
## நில அளவைச் சபை
## Land Survey Council

**ඉඩම්  මැනුම් සභාව, සර්වේයර් ජනරාල් කාර්යාලය,අංක150, කොළඹ 05**
**நில அளவைச் சபை, நில அளவையாளர் அதிபதி அலுவலகம்,இல.150 பெர்னாட்கொழும்பு 05**
**Land Survey Council, Surveyor General’s Office,No 150, Colombo 05**

# உள்ளடக்கம்


01. தலைவரின் செய்தி 01

02. நோக்கும் இலக்கும் 03

03. நில அளவைச் சபையின் தொழிற்பாடுகள் 04

04. நில அளவைச் சபையின் அதிகாரங்கள் 05

05. நில அளவைச் சபையின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கை 05

06. நில அளவைச் சபையின் ஊழியர்கள் 07

07. செயற்பாடுகள் 07

08. கல்வியும் பயிற்சியும் 10

09. நிதியும் நிதி முகாமைத்துவமும் 11

10. 2015ம் ஆண்டுக்கான இறுதி கணக்கு

i. நிதி நிலை பற்றிய அறிக்கை

ii. நிதிச் செயற்பாடு பற்றிய அறிக்கை

iii. தேறிய சொத்து மாற்றங்கள் பற்றிய அறிக்கை

iv. காசுப் பாய்ச்சல் அறிக்கை

v. 2015 டிசம்பர 31ற்கான கணக்கு அறிக்கை

vi. 2015 டிசம்பர் 31ற்கான பொதுக் கணக்கு கொள்கைகள்

11. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

## 01. தலைவரின் செய்தி

தலைவரின் செய்தி
நில அளவைச் சபை
இல. 150, ப்ர்னாட் சொய்சா வீதி,
நாரஹேன்பிட்ட,
கொழும்பு - 05
01.03.2017

தொழிற்சூழலை வலுப்படுத்தும் நோக்குடன் தரமான நில அளவைச் சேவையினை முற்படுத்தி போட்டிகரமான உலகசந்தையில் நில அளவைச்சபை (டுளுஊ) 2015ஆம் ஆண்டு வெற்றிகரமாக செயற்பட்டுள்ளது என்பதை நான் அறியத் தருவதில் மகிழ்ச்சி அடைகிறேன். நில அளவையாளர்களை பதிவு செய்தல், பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களுக்கு வருடாந்த பயிற்சி அனுமதிப்பத்திரம் வழங்குதல், பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர் மத்தியில் தொழில் ரீதியான ஒழுக்கங்களை கொண்டு நடாத்துதல், பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களுக்கு எதிரான பொது மக்களின் முறைப்பாடுகளை ஆராய்தல் பதிவு செய்யப்பட்டு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள நில அளவையாளர்களுக்கான தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி (ஊீனு) நிகழ்வுகளை நடாத்துதலும் ஏனைய பொருத்தமான நிறுவனங்களுடனான இணைச்செயற்பாடு போன்றன. நில அளவைச் சபையினால் (டுளுஊ) (ஆய்வுச் சட்ட இலக்கம் 17 - 2002 இன் படி) மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளாகும்.

"சகல நில அளவைச் செயற்பாடுகளையும் ஒழுங்குபடுத்தல்'' என்பது நில அளவைச் சட்டத்தில் குறிப்பிடப்படுள்ள குறிக்கோள்களுள் ஒன்றாகும். ஒரு தசாப்தத்துக்கு மேற்பட்ட காலம் கழிந்திருந்தாலும் 2015ம் வருடத்தில் ஒழுங்கு விதிகள் ஒரு பரீட்சித்தல் ஆக பதிக்கப்பட்டதால் நாட்டின் சகல பகுதிகளிலும் நடைபெறுகின்ற நில அளவைச் செயற்பாடுகளின் முன்னேற்றத்தினை அவதானிக்க முடியுமாக இருந்தது.

சுருக்கமாக கூறினால் இவ்விதிகள் நில அளவைத் தொழில் அங்கத்தவர்கள் அவர்களது தொழிலை சீரான முறையில் மேற்கொள்வதற்கு உற்சாகப்படுத்தும் அதே நேரம் மிகச் சரியாகவும் தரமானதாகவும் செய்யத்தூண்டும் சகல செயற்குழுவினருடனும் நீண்ட நாள் கலந்துரையாடல்களுக்கும் வாதப்பிரதிவதங்களுக்குப் பின் இவ் ஒழுங்கு விதிகள் பிரகாசிக்கின்றன எனக் கூறிக் கொள்வதுடன் இது குறிப்பாக நில அளவைத் தொழிலுள்ள சகல அங்கத்தவர்களுக்கும் நாட்டுக்கும் பாரிய அளவில் நன்மை பயக்கும் என நான் ஆர்வத்தோடு நம்புகிறேன். சில முன்னேற்றங்கள் நல்லது திருத்தங்களின் பின்பு அவ்விதிகள் இறுதிப்படுத்தப்பட்டு வர்த்தமானி படுத்தப்படும்.

நில அளவைச் சபை பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர் மத்தியில் தொழில் ரீதியான ஒழுக்கங்களையும் அவர்களது தொடர்ச்சியான தொழில் விருத்தியையும் (ஊீனு) நிலை நாட்டுவதில் அதிக ஆர்வம் காட்டியதுடன் பல தொடர்ச்சியான தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சிகளை நில அளவைச் சபையின் பங்கு பற்றுதலுடனும் அனுமதியுடனும் பதிவு செய்யப்பட்டு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நில

அளவையாளர்களுக்கு 2015ம் ஆண்டு நடாத்தியது பதிவு செய்யப்பட்டு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நில அளவையாளர்களினால் தொடர்ச்சியான தொழில் அபிவிருத்தி பாடநெறிகளை பின்பற்றுவதற்காக காட்டப்பட்ட ஆர்வம் குறிப்பிடத்தக்கதாகும்.

நில அளவைச் சபையின் அங்கத்தவர்கள் மற்றும் உதவிச் செயலாளர், கணக்காளர் (பகுதி நேரம்) மற்றும் இச்சபையின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் நில அளவைக் குழுவின் சுமுகமான இயக்கத்துக்கு மட்டற்ற ஒத்துழைப்புக்களை வழங்கியமைக்காக எனது மனப் பூ ர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ீ.ஆீ.. உதயகாந்த
தலைவர்

## 02. இலக்கும் நோக்கும்

### இலக்கு

தேசிய அபிவிருத்திக்காக எமது பௌதீக மற்றும் இயற்கை வளங்களை சட்டபூ ர்வமாக மிகவும் சாதகமான முறையில் பயன்படுத்தி முற்றுமுழுதாக சிறப்பான முறையில் நில அளவைக் குழுவின் செயற்பாடுகளைச் செய்வதை உறுதிப்படுத்திக்கொள்வதும் அதன் மூலம் தொழிற்சூழலை வலுப்படுத்தி தரமான நிலஅளவைச் சேவையினை குறிக்கோளாகக் கொண்டு போட்டிகரமான உலக சந்தையில் தமது சேவைகளை மேற்கொள்வதை நிச்சயப்படுத்திக் கொள்ளல்.

### நோக்கு

நில அளவைத் தொழிலையும் அதன் செயற்பாடுகளையும் சிறந்த முறையில் ஒழுங்கமைத்து இத்தொழிலினுள் நுழைப்பவர்கள் நவீன தொழில்நுட்ப கேள்விகளுக்கு நிகரான கல்வியையும் பயிற்சிகளையும் இத்தொழிலுக்குரிய சிறந்த ஒழுக்கவிழுமியங்களையும் பெற்றுக் கொள்வதுடன் அதன் மூலம் இத்தொழிலில் ஈடுபடுபவர்கள் தொழில் நடத்தையின் உச்ச தரத்தை நிலைநாட்டுவதை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

## 03. நில அளவைச் சட்ட இல. 17 - 2002 இன் 37ம் பகுதியில் வழங்கப்பட்டுள்ளவாறு நில அளவைக் குழுவின் தொழிற்பாடுகள்.

நில அளவைச் சட்ட இல. 17 - 2002ல் குறிப்பிட்டு இடவசதியளிக்கப்பட்ட படி, இல 150 நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம் (முதலாம் மாடி) கிருல வீதி, கொழும்பு 5 இல் 2013 இல் நில அளவைக் குழு நிர்மாணிக்கப்பட்டது.

மேலே கூறப்பட்ட சட்டத்தின் 37ம் பகுதியில் குறிப்பிட்டவாறு இக்குழுவின் தொழிற்பாடுகள் பின்வருமாறு.

ய) நில அளவை தொடர்பான நியமங்களையும் செயல் முறைகளையும் நிலை நாட்டுவதுடன் நில அளவையில் ஈடுபடுகின்ற நபர்களுக்கிடையே தொழில் ரீதியான ஒழுங்குகளையும் நிலைநாட்டல்.

டி) நில அளவையாளர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளும் அதே வேளை அவர்களிடம் எதிர்பார்க்கப்படும் தகைமைகள் மற்றும் அனுபவங்களுடன் நில அளவையைச் செய்வதற்கான ஆற்றல்கள் மற்றும் திறன்கள் பற்றி நில அளவைக் குழு திருப்தியடையும் பட்சத்தில் மட்டுமே அவர்களைப் பதிவு செய்தல்.

உ) பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களிடமிருந்து வருடாந்த பயிற்சி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வதும் அத்தொழிலை நடாத்துவதற்கு அவர்கள் கொண்டிருக்கும் அறிவு மற்றும் திறன்கள் பற்றி நில அளவைக் குழு திருப்தி மற்றும் திறன்கள் பற்றி நில அளவைக் குழு திருப்தியடையும் பட்சத்திலேயே அனுமதிப் பத்திரத்தினை வழங்குதல்.

ன) நில அளவைத் தொழிலில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் மத்தியில் அதிக தரம் வாய்ந்த தொழிற் கல்வியை வழங்குவதன் மூலம் அத்தொழிலை மேம்படுத்தல்.

ந) வருடாந்த நில அளவைப் பயிற்சி அனுமதிப் பத்திரத்தை பெறுவதற்கு அத்தொழிலில் பயிற்சி பெறுபவர்களின் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் தொழில் விருத்தி நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

க) நில அளவை தொழிலில் கல்வி மற்றும் தொழிற் தகைமைகளை இனங்கண்டு, செயன்முறை அனுபவத் தேவைகளை மையமாகக் கொண்டு தகுதிகாண் பரீட்சைகளை நடாத்தி பரீட்சாத்திகளுக்கு தொழில் ரீதியான நேர்முகப் பரீட்சைகளை நடாத்துவதன் மூலம் பதிவு செய்தல் மற்றும் பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களுக்கு வருடாந்த பயிற்சி அனுமதிப் பத்திரத்தை வழங்குதல்.

ப) நில அளவைத் தொழிலில் ஈடுபடுவோரின் பாரபட்சமற்ற கல்வி, பயிற்சி மற்றும் அங்கீகாரம் போன்றவற்றுக்கு உத்தரவாதமளிப்பதை நோக்காகக் கொண்டு வெளி நாடுகளிலுள்ள பொருத்தமான அதிகாரிகளுடன் பரஸ்பர பேச்சு வார்த்தைகளை நடாத்தி புரிந்துணர்வுடன் செயற்படல்.

ா) இலங்கையில் நில அளவைத் தொழில் மற்றும் நிலம் பற்றிய தகவல்கள் சம்பந்தமான கல்வி மற்றும் பயிற்சிகளில் ஈடுபடுகின்ற நிறுவனங்களுடன் இணைந்து கொள்வதன் மூலம் தேவையான கல்வி தரத்தினை நிலை நாட்டுதல்.

ை) இலங்கையில் அதி உயர்ந்த தொழில் தரத்தினை நிலை நாட்டக் கூடிய ஏனைய பொருத்தமான நிறுவனங்களுடன் இணைந்து கொள்ளல்.

## 04. நில அளவைச் சபையின் அதிகாரங்கள்

நில அளவைச் சபைaன் அதிகாரங்கள் 2002ம் ஆண்டின் 17ம் இலகÊக நிலஅளவைச் சட்டத்தின் 27ம் பகுதியில் வரையறுகÊகப்பட்டுளÊளது.

ய) பெற்றுக் கொள்ளல், பிடித்து எடுத்துக் கொள்ளல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடுதல், அடைமானம் வைத்தல் ஏதாவது அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல்.

டி) பணமாகவே வேறு வடிவத்திலோ கிடைக்கக்கூடிய அன்பளிப்புக்கள் மற்றும் நன் கொடைகளை ஏற்றுக் கொள்ளுதலும் அவற்றை அதனுடைய தொழிற்பாடுகளை நிறை வேற்றுவதற்காகப் பிரயோகித்தலும்.

உ) சபையின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அவசியமான போது உத்தி யோகத்தர்களையும் பணியாட்களையும் நியமித்தல்.

ன) அவ்வாறு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் பணியாட்களுக்கும் ஊதியம் வழங்குவதை உறுதிச் செய்து கொள்ளல்.

ந) அதனுடைய தொழிற்பாடுகளை வினை திறன் மிக்க வகையில் நிறைவேற்றுவதற்காக செயற்குழுக்களை நியமித்தல்.

க) அதனுடைய உத்தியோகத்தர்களுக்கும், பணியாட்களுக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டமொன்றை அமுல்படுத்துவதுடன் சமூக நலன் மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை வழங்குதல்.

ப) சபையின் நிர்வாக விடயங்கள் சம்பந்தமான சட்டதிட்டங்களை வகுத்தல்.

ா) பொதுவாக அவ்வாறான மேலும் பல செயற்பாடுகள் மேற்கொள்வது சபையின் தொழிற்பாடுகளை இலகுவாகவும் சீராகவும் நிறைவேற்றுவதற்கு அவசியமாகும்.

## 05. நில அளவைச் சபையின் 2015ம் ஆண்டுக்குரிய செயற்பாட்டு அறிக்கை

### 1. நில அளவைச் சபையின் அமைப்பு

2002ம் ஆண்டின் 17ம் இலகÊக நிலஅளவைச் சட்டத்தின் பகுதி 27 இன் படி, நில அளவைச் சபையானது பின்வரும் ஏழு உறுபினர்களை உள்ளடங்கியுள்ளது.

#### a. முன்னாள் அலுவலக உறுப்பினர்கள்

- நில அளவையாளர் தலைமை அதிபதிÉ இவர் தலைவராக இருக்கவேண்டும்
- நில அளவையாளர் தலைமை அதிபதியினால் பெயர் குறித்து நியமிக்கபடுபவரும் பிரதி நில அளவையாளர் தலைமை அதிபதியின் பதவி வரிசைக்கு குறையாத பதவி வரிசையை கொண்டவருமான பதிவு பெற்ற நில அளவையானர் ஒருவர்É இவர் துணைத் தலைவராக இருத்தல் வேண்டும்.
- 1969ம் ஆண்டின் 21ம் இலகÊக நில அளவை மற்றும் நிலப்படம் வரைதல் நிறுவகச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நில அளவை மற்றும் நிலப்படம் வரைதல் நிறுவனத்தின் பணிப்பாளர்.

டி. நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

- இலங்கை நில அளவையாளர்கள் நிறுவகத்தால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவர்களும் நில அளவை செய்தலில் பரந்த அனுபவமும், சான்றுதியான ஆற்றல்களும் கொண்டவர்களுமான பதிவு பெற்ற மூன்று நில அளவையாளர்கள்.
- பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவரும் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்தான கல்வி, நிருவாகம், முகாமை அல்வது பொறியியல் துறையிள்ளவருமான கல்விமான்களுள் ஒரு கல்விமான்.

## 2. 31 டிசம்பர் 2015 இன் பேரவை உறுப்பினர்கள்

| | | | |
|---|---|---|---|
| i. | திரு. ீ.ஆீ.. உதயகாந்த | - | தலைவர் |
| ii. | திரு. ளு.ஆீ.. சங்ககார | - | உதவித்தலைவர் |
| iii. | திரு. ளு.னுீ.து. தம்பேகம | - | அங்கத்தவர் |
| iv. | டாக்டர். மு.சு.ஆ.ரு. பண்டார | - | அங்கத்தவர் |
| v. | திரு. ஊ.னு.ளு. குணதிலக | - | அங்கத்தவர் |
| vi. | திரு. ஆ. கலுதாந்திரி | - | அங்கத்தவர் |
| vii. | திரு. று.யு.யு. விஜயரத்ன | - | அங்கத்தவர் |

## 3. மீளாய்வுப் கால பகுதியில் பேரவை உறுப்பினர்கள்

| | | | |
|---|---|---|---|
| i. | திரு. ீ.ஆீ.. உதயகாந்த(தலைவர்) | - | 29.05.2014 முதல் மீளாய்வு காலப்பகுதியில் |
| ii. | திரு. ளு.ஆீ.. சங்ககார(உதவித்தலைவர்) | - | 29.05.2014 முதல் மீளாய்வு காலப்பகுதியில் |
| iii. | திரு. ளு.னுீ.து. தம்பேகம(அங்கத்தவர்) | - | 25.07.2013 முதல் மீளாய்வு காலப்பகுதியில் |
| iv. | டாக்டர். மு.சு.ஆ.ரு. பண்டார (அங்கத்தவர்) | - | 01.01.2015 முதல் மீளாய்வு காலப்பகுதியில் |
| v. | திரு. ஊ.னு.ளு. குணதிலக (அங்கத்தவர்) | - | 01.01.2015 முதல் மீளாய்வு காலப்பகுதியில் |
| vi. | திரு. ஆ. கலுதாந்திரி (அங்கத்தவர்) | - | 01.01.2015முதல் மீளாய்வு காலப்பகுதியில் |
| vii. | திரு. று.யு.யு. விஜயரத்ன (அங்கத்தவர்) | - | 01.01.2015 முதல் மீளாய்வு காலப்பகுதியில் |

## 4. பேரவையின் கூட்டங்களுக்கு வருகை தந்தோர் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு. ீ.ஆீ.. உதயகாந்த (தலைவர) | - 19 கூட்டங்கள் |
| 2. | திரு. ளு.ஆீ.. சங்ககார (உதவித்தலைவர்) | - 19 கூட்டங்கள் |
| 3. | திரு. ளு.னுீ.து. தம்பேகம (அங்கத்தவர) | - 16 கூட்டங்கள் |
| 4. | டாக்டர். மு.சு.ஆ.ரு. பண்டார (அங்கத்தவர) | - 18 கூட்டங்கள் |
| 5. | திரு. ஊ.னு.ளு. குணதிலக (அங்கத்தவர) | - 17 கூட்டங்கள் |
| 6. | திரு. ஆ. கலுதாந்திரி (அங்கத்தவர) | - 18 கூட்டங்கள் |
| 7. | திரு. று.யு.யு. விஜயரத்ன (அங்கத்தவர) | - 17 கூட்டங்கள் |

## 06. நில அளவைச் சபையின் உத்தியோகத்தர் குழாம்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. G.D.S.K. குணரத்ன<br>பதில் செயலாளர் | - | 01.01.2009 முதல் இன்று வரை |
| 2. | திரு. ரஞ்ஜித் மஹகும்புர<br>கணக்காளர் (பகுதி நேரம்) | - | 01.03.2008 முதல் இன்று வரை |
| 3. | செல்வி. W.A.S. பிரியதர்ஷனி<br>உதவி கணினிப் பிரயோகம்<br>மற்றும் எழுதுவினைஞர் | - | 24.05.2004 முதல் இன்று வரை |
| 4. | திருமதி. R.M.N. ரத்னாயக<br>உதவி கணினி பிரயோகம்<br>மற்றும் எழுதுவினைஞர் | - | 18.03.2003 முதல் இன்று வரை |
| 5. | திரு T.G. பெர்னாந்து<br>அலுவலக உதவியாளர் | - | 15.07.2004 முதல் இன்று வரை |

## 07. செயற்பாடுகள்


### 1. பதிவு செய்தல்

மீள் பரிசோதனை செய்த காலப்பகுதியில் 45 புதிய நிலஅளவையாளர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்ற அதே வேளை 31.12.2015 வரை பதிவு செய்யப்பட்ட மொத்த நில அளவையாளர்களின் எண்ணிக்கை 2074 ஆகும்.

### 2. வருடாந்த பயிற்சி அனுமதிப்பத்திரம்

மீள் பரிசோதனை காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட 1048 நில அளவையாளர்கள் வருடாந்த பயிற்சி அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொண்டனர். 2014ம் ஆண்டினை விட 2015ல் வழங்கப்பட்ட மொத்த அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை சற்று குறைவடைந்திருப்பதை வரைபில் காணலாம்.

வழங்கப்பட்ட மொத்த அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை
2014 / 2015




31.05.2015 வரையில் வருடாந்த பயிற்சி அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொண்ட பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களின் முதலெழுத்துக்களுடனான பெயர்கள், பதிவு இலக்கம், ஆளடையாள அட்டை இலக்கம் முதலியன அரசாங்க வர்த்தமானி இலக்கம் 1908 பகுதி 01 இல் 27.03.2015 அன்று முறையாக வெளியிடப்பட்டது.

சகல அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட நில அளவையாளர்களின் விபரங்கள் அதாவது பதிவு இலக்கங்கள், முதலெழுத்துக்களுடன் பெயர், முழுப்பெயர், ஆளடையாள அட்டை இலக்கம், அவர்கள் வசிக்கும் மாவட்டம், முகவரி, தொலைபேசி இலக்கம் வருடாந்த பயிற்சி அனுமதிப்பத்திர இலக்கம், அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும். காலம் முதலியன பின்வரும் வலைத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. றறற.ளரசளநல.பழள.டம அதிலுள்ள தகவல்கள் மூன்று மாதங்களுக்கொரு முறை சரி செய்யப்படுகின்றன.

## 3. பொது மக்களுக்கான தகவல்கள்

நில அளவைச் சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகளை அறிந்து வைத்திருக்கின்ற பொது மக்கள் சார்பான அங்கத்தவர்கள் உயிர் வாழும் அல்லது மரணித்த பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்கள் பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்ள தொடர்ச்சியாக எமது உதவியை நாடுவதுடன் அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர்களினால் தயாரிக்கப்பட்ட சுமார் 100 வருடங்களிற்குட்பட்ட நில அளவைத் திட்ட மூலப் பிரதிகள் பற்றிய தகவல்களை பெற்றுக் கொள்ள எம்மை நாடுகின்றனர். அத்தகவல்களை உரிய நேரத்தில் வழங்கும் நோக்குடன் சொந்த முகவரி, பதிவு இலக்கங்கள், பதிவு செய்யப்பட்ட அனுமதிப் பத்திரம் முதலிய தகவல்களை ஒன்றிணைத்து கணினியில் பதிவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு கொண்டிருக்கின்றன. இவை கிடைக்கக் கூடிய தொடர்பு இலக்கங்களை உள்ளடக்கி சரி செய்யப்பட்டு கொண்டிருப்பதன் மூலம் அனுமதிப்பத்திரமுள்ள நில அளவையாளர்களினால் தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட திட்டப் பிரதிகளை பெற்றுக் கொள்ள பொது மக்களுக்கு உதவக்கூடிய நில அளவைகள் சபை இச்சேவைகள் பற்றி திருப்தியடையவில்லை. ஏனெனில் பழைய திட்டப் பிரதிகளை ஒழுங்கான முறையில் பெற்றுக் கொள்வதற்கு அதனால் உதவ முடியாதுள்ளது. மீளாய்வு காலப்பகுதியில் அவ்வாறான 268 விசாரணைகள் இருந்தன. நில அளவைச் சபைக்கு எதிராக பொதுமக்களால் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள்.

## 4. அனுப்பப்பட்ட முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை



மேலே உரு 2014 – 2015 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் அகற்றப்பட்ட முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கையைக் காட்டுகின்றது.

2014ம் ஆண்டில் 24 முறைப்பாடுகள் முன் கொண்டு வரப்பட்டதுடன் 2015இல் அனுமதிப் பத்திரம் பெற்ற நில அளவையாளர்களுக்கெதிராக அவர்களின் தொழில் ரீதியான பிழையான நடத்தைகள் சம்பந்தமாக 80 முறைப்பாடுகள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டன. மீளாய்வுக் காலப் பகுதியில் நில அளவைச் சபை 70 ஆரம்ப விசாரணைகளையும் சம்பிரதாயமான விசாரணைகளையும் நடாத்தியது. 2015ம் ஆண்டில் அவ்வாறான 64 முறைப்பாடுகளுக்கெதிரான நடவடிக்கைகள் எடுக்க முடியுமாயிருந்ததுடன் வருட இறுதியில் 40 வழக்குகள் மட்டுமே எஞ்சியிருந்தன.

எவ்வாறாயினும் சில முறைபாடுகள் நில அளவைச் சபையின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்டதனால் அவற்றுக்கு உதவி வழங்க முடியாமல் போனதுடன் நில அளவை சம்பந்தமான சில வழக்குகள் நீதிமன்ற ஆணையாளரினால் நீதி மன்ற கட்டளைக்கமைய கையாளப்படும் அதே நேரம் சில முறைப்பாடுகள் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் இன்னும் சில குற்றச்சாட்டுக்கள் போதியளவு சாட்சிகள் இல்லாத காரணத்தினால் நிரூபிக்கப்பட்ட முடியாதுள்ளன.

நில அளவைச்சட்டம் 17 - 2002 க்கு இணங்க 2015ம் ஆண்டில் நில அளவைச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பயனாக அனுமதிப்பத்திர இடை நிறுத்தம் அல்லது பதிவை ரத்து செய்தல் முதலியன பின்வருமாறு நிகழ்ந்தது.

| வழக்கு | பதிவு இல. | நில அளவையாளரின் பெயர் | விசாரணையின் பின் முடிவு |
|---|---|---|---|
| டுளுஊ.5.767 | 19700887 | பு.சு.று.ஆ. வீரகோன் | பதிவு இடை நிறுத்தப்பட்டது. 2015.09.01 முதல் 2016.08.31 வரை |
| டுளுஊ.5.768 | 19861266 | ளு. ரவீர | பதிவு இடை நிறுத்தப்பட்டது. 2015.09.01 முதல் 2018.08.31 வரை |
| டுளுஊ.5.686 | 19770913 | னு.ஆ. புத்ததாச | வருடாந்த பயிற்சி அனுமதிப் பத்திரம் இடை நிறுத்தப்பட்டது. 2015.11.01 முதல் 2018.10.31 வரை |
| டுளுஊ.5.486 | 19890767 | று.பு.னு.ரு. கருநாரத்ண | வருடாந்த பயிற்சி அனுமதிப் பத்திரம் இடை நிறுத்தப்பட்டது. 2015.11.01 முதல் 2016.04.30 வரை |
| டுளுஊ.5.735 | 1995031 | னு.சு. குமாரகே | வருடாந்த பயிற்சி அனுமதிப் பத்திரம் இடை நிறுத்தப்பட்டது. 2015.11.01 முதல் 2016.10.31 வரை |
| டுளுஊ.5.758 | 19780901 | ளு.ஏக்கநாயக்க | வருடாந்த பயிற்சி அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்டது. 2015.11.01 முதல் 2016.04.30 வரை |
| டுளுஊ.5.706 | 20011071 | ஆ.ஊ.ஆ. ரபீக் | வருடாந்த பயிற்சி அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்டது. 2015.11.01 முதல் 2018.10.31 வரை |
| டுளுஊ.5.731 | 19860776 | சு. உயங்கொட | பதிவு இடைநிறுத்தப்பட்டது. 2015.12.01 முதல் 2016.11.30 வரை |

| | | | |
|---|---|---|---|
| டுளுஊ.:.5.:.757 | 19710909 | டீ.டு.னு. பெர்னார்ன்டோ | வருடாந்த பயிற்சி அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்டது. 2015.12.01 முதல் 2011.05.31 வரை |
| டுளுஊ.:.5.:.775 | 19850885 | மு.று. பத்திரன | வருடாந்த பயிற்சி அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்டது. 2016.01.01 முதல் 2016.06.30 வரை |

## 08. கல்வியும் பயிற்சியும்

### 1. தொடர்ச்சியான தொழில் விருத்தி (ஊீனு) பாடநெறிகள்

தொடர்ச்சியான தொழில் விருத்தி என்பது நில அளவையில் ஒரு முக்கியமான பகுதியாகும். நில அளவைச் சபை அதனை அறிந்து பதிவு செய்யப்பட்டு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்ட நில அளவையாளர்களுக்கு நில அளவை உத்தியோகத்தர்களினால் நில அளவைக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களுடன் கூடிய பாட நெறிகளை அல்லது செயலமர்வுகளை பின்பற்ற உட்சாக மூட்டியது.

**a) முதன் முறையாக அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்ட நில அளவையாளர்களுக்கான செயலமர்வுகள்**

முதல் முறையாக வருடாந்த பயிற்சி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்ட நில அளவையாளர்களின் நன்மை கருதியும் நில அளவைச் சபையில் பயிற்சி அனுமதிப்பத்திரம் பெற்று அதன் மூலம் வாழ்க்கை முழுதும் நில அளவைத் தொழிலை மேற்கொள்வதற்கு உதவியாகவும் நில அளவைச் சபை இன்னுமொரு செயலமர்வை ஆரம்பித்தது. இச்செயலமர்வில் பரந்த அனுபவங்கள் மற்றும் நிரூபிக்கப்பட்ட திறமைகளையும் கொண்ட முதற்தரமான .:. பிரபல்யமான பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்கள் மெரு கூட்டப்பட்டார்கள்.


**b) ஏனைய நிறுவனங்களால் நடாத்தப்படும் தொடர்ச்சியான தொழில் விருத்தி (ஊீனு) பாடநெறிகள**

இலங்கை நில அளவை திணைக்களம் இலங்கை நில அளவை நிறுவனம் (ளுஐளுடு) மற்றும் மாவட்ட அனுமதிப் பத்திரம் பெற்ற நில அளவையாளர்களின் சங்கம் (கம்பஹா, பதுளை, கண்டி) முதலிய மூன்று நிறுவனங்கள் தொடர்ச்சியான தொழில் விருத்தியை குறிக்கோளாகக் கொண்டு பயிற்சி நெறிகளை பதிவு செய்யப்பட்ட .:. பதிவு செய்யப்பட்டு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நில அளவையாளர்களுக்கு நடத்துகின்றன. நில அளவைச் சபையின் அங்கீகாரத்துடனும் வழிகாட்டல்களுடனும் தொடர்ச்சியான தொழில் விருத்தி பாட நெறிகளை இன்நிறுவனங்கள் வழங்குகின்றன

நடைபெற்ற தொடர்ச்சியான தொழில் விருத்தி பாடநெறிகள் பற்றிய சுருக்கம்

| | நிறுவனத்தின் பெயர் | தொழில் விருத்தி பாடநெறியின் பெயர் | திகதி |
|---|---|---|---|
| 1 | நில அளவைச் சபை | பயிற்சி நிகழ்வு | 2015.03.30 |
| 2 | இலங்கை நில அளவை நிறுவனம் | பிரிக்கும் சட்டமும் நகர அபிவிருத்தி சட்டமும் | 2015.06.15 |
| 3 | நில அளவைச் சபை | உலக நிலைப்படுத்தும் முறை புதிய போக்குகள் (பீளு) | 2015.06.19 |
| 4 | கண்டி நில அளவையாளர் சங்கம் | பிம்சவிய பிற்பட்ட நில அளவை | 2015.08.09 |
| 5 | நில அளவைச் சபை | கணினி உதவியுடனான வரைதல் (ஊயுனு) தானாக இயங்கும் நில அளவையும் திட்டம் தயாரித்தலும் | 2015.09.07 |

## 09. நிதிக் கையாள்கை தொடர்பான மீளாய்வு




மேலேயுள்ள அட்டவணை நில அளவைச் சபையின் மொத்த வருமானம் ரூ. 4,893,381.62 ஆக அதிகரிப்பதையும் உற்பத்தி வருமானம் நடைமுறை ஆண்டில் ரூ. 4,355,714.75 ஆக ஒப்பீட்டளவில் அதிகரிப்பதையும் காட்டுகிறது.

நில அளவைச் சபையின் செலவு இக்காலப் பகுதியில் ரூ. 5,088,383.67 ஆக உயர்வடைவதையும் ரூ. 732,668.92 நிலுவையாக எஞ்சியிருப்பதையும் காட்டுகிறது. 2010, 2011, 2012, 2013, 2014, 2015 போன்ற ஆண்டுகளில் திறைசேரியிலிருந்து எந்த நிதியும் வழங்கப்படவில்லை. 2015ல் ரூ. 294,316.50 மூலதனச் செலவாக இருந்தது.

## 10. நிதியும் நிதி சம்பந்தமான நிர்வாகமும்

நில அளவைச்சபையின் வருமானமானது பிரதான வருமானமானது வருடாந்த பயிற்சி அனுமதிப் பத்திரங்களின் கட்டணங்கள் மூலமும் தொடர்சியான தொழில் விருத்திப் பயிற்சி நெறிகளை நடாத்துவதன் மூலமும், கடமை தவறும் பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களிடம் முறையான விசாரணைகளின் பின் தண்டனையை செலுத்துமாறு வலியுறுத்துவதன் மூலமும் சேகரிக்கப்படுகின்றது.

31.12.2015 தினத்தன்று ரூ. 7,383,703.47 தொகையானது இலங்கை வங்கியின் பல்வேறு நிலையான வைப்பு கணக்கில் கொண்டுள்ளது.

| | |
|---|---|
| எச்.எம்.பீ.பி. ஹேரத் | எஸ்.சிவானந்தராஜா |
| தலைவர் | செயலாளர் |
| சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச் | நில அளவைகள் சபை |

# 2015ம் ஆண்டுக்கான இறுதி கணக்கு

**காணி அமைச்சு**

**நில அளவைகள் சபை**

**2015 டிசம்பர் 31 ஆம் திகதியன்று**

**நிதி நிலைமை தொடர்பான கூற்று**

| விபரம் | குறிப்புக்கள் | 2015 | | 2014 | |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **சொத்துக்கள்** | | | | | |
| **அசையும் சொத்துக்கள்** | | | | | |
| காசு மற்றும் காசுக்கு | 1 | 2,266,843.18 | | 7,461,849.03 | |
| கிடைக்கப் பெற வேண்டியவை | 2 | 54,207.00 | | 147,373.73 | |
| இடர் கடன் | 3 | 127,275.00 | | 222,407.00 | |
| விழா முற்பணம் | | - | 2,448,325.18 | 3,000.00 | 7,834,629.76 |
| **அசையாத சொத்துக்கள்** | | | | | |
| நிலையான வைப்புக்கள் | 4 | 7,383,703.47 | | 2,951,147.39 | |
| பொறிகள் மற்றும் இயந்திர | 5 | 666,487.77 | | 517,018.54 | |
| | | | 8,050,191.24 | | 3,468,165.93 |
| **மொத்த சொத்துக்கள்** | | | 10,498,516.42 | | 11,302,795.69 |
| **பொறுப்புக்கள்** | | | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| ஏற்கனவே கிடைக்கப் பெற்றுள்ள | | 2,382,500.00 | | 2,401,250.00 | |
| செயலமர்வுகளின் வருமான | | 151,900.00 | | | |
| செலுத்தப்பட வேண்டிய | | 128,936.63 | | 254,723.26 | |
| சேரல் செலவுகள் | | 217,159.84 | | 328,133.56 | |
| உறுதியற்ற கணக்கு | 6 | 8,819.71 | | 8,819.17 | |
| அடையாளம் காணப்படாத | | 53,650.00 | | | |
| மீள அனுப்பப்பட வேண்டிய | | 8,350.00 | | | |
| | | | 2,951,316.18 | | 2,992,926.53 |
| **நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | | | | | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | | 2,951,316.18 | | 2,992,926.53 |
| **தேறிய சொத்துக்கள்** | | | **7,547,200.24** | | **8,309,869.16** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைகள்** | | | | | |
| மூலதன விநியோகம் | | | | | |
| பொதுத் திறைசேரி | | 1,043,030.00 | | 1,043,030.00 | |
| திரண்ட நிதியம் | | 7,236,839.16 | | 6,799,331.00 | |
| மிகை/ பற்றாக்குறை | | (732,668.92) | | 467,508.16 | |
| | | | **7,547,200.24** | | **8,309,869.16** |

நில அளவைகள் சபை சார்பில் இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் என்பவற்றிற்காக சபையின் உறுப்பினர்கள் பொறுப்புக் கூறுகின்றனர். இந்த நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டு உள்ளவாறு மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டு உள்ளன.

எச்.எம்.பீ.பி. ஹேரத்
செயலாளர்
சுற்றுலாத்துறை மற்றும் காணி
அமைச்சு

எஸ்.சிவானந்தராஜா
தலைவர்
நில அளவைகள் சபை

கே.எல்.ஏ.என். சந்தமாலி
கணக்காளர்
நில அளவைகள் சபை

காணி அமைச்சு

**நில அளவைகள் சபை**

**2015 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகை**

| விபரம் | குறிப்பு | 2015 | | 2014 | |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **வருமானங்கள்** | | | | | |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | | 2,618,750.00 | | 2,678,825.00 | |
| பதிவுக் கட்டணம் | | 42,000.00 | | 73,500.00 | |
| வட்டி வருமானங்கள் | 7 | 476,087.06 | | 674,372.47 | |
| ஏனைய வருமானங்கள் | 8 | 113,377.69 | | 1,466,684.15 | |
| செயலமர்வுகளின் வருமானம் | | 1,105,500.00 | | | |
| மொத்த வருமானம் | | | **4,355,714.75** | | **4,893,381.62** |
| **செலவுகள்** | | | | | |
| **ஆளுக்குரிய வேதனாதிகள்** | | | | | |
| சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | 9 | 804,030.90 | | 794,375.00 | |
| மேலதிக நேர மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவுகள் | | 2,461.75 | | | |
| ஏனைய கொடுப்பனவுகள் | 10 | 2,327,723.97 | | 1,730,127.33 | |
| | | | (3,134,216.62) | | (2,524,502.33) |
| **பிரயாணச் செலவுகள்** | | | | | |
| உள்நாட்டு | | | (10,796.00) | | (5,211.00) |
| **விநியோகங்கள்** | | | | | |
| காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைப்பாடுகள் | | 136,686.86 | | 123,503.38 | |
| ஏனையவை | | 113,681.00 | | 72,495.00 | |
| | | | (250,367.86) | | (195,998.38) |
| **பராமரிப்புச் செலவுகள்** | | | | | |
| இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் | | | (10,640.00) | | (4,256.00) |
| **சேவைகள்** | | | | | |
| தபால் மற்றும் தொடர்பாடல் | | 134,646.79 | | 134,423.71 | |
| மின்சாரம் மற்றும் நீர் | | 78,734.40 | | 78,734.40 | |
| செயலமர்வுகளின் வருமானங்கள் | | 952,371.68 | | | |
| ஏனையவை | 1 | 371,763.05 | | 1,359,866.38 | |
| | | | (1,537,515.92) | | (1,573,024.49) |
| தேய்மானம் | | | (144,847.27) | | (122,881.26) |
| மொத்தச் செலவுகள் | | | (5,088,383.67) | | (4,425,873.46) |
| **காலப்பகுதிக்கு உரிய மிகை/ பற்றாக்குறை** | | | **(732,668.92)** | | **467,508.16** |

**காணி அமைச்சு**

**நில அளவைகள் சபை**

## 2015 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான உரிமை முதல் மாற்றமடைதல் தொடர்பான கூற்று

| விபரம் | மூலதனக் கொடைகள் | திரண்ட நிதியம் / பற்றாக்குறை | மொத்தம் |
|---|---|---|---|
| 2014 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மீதி | 1,043,030 | 7,266,841.00 | 8,309,871.00 |
| முன்னைய வருட சீராக்கல்கள் | | (30,000.00) | (30,000.00) |
| காலப்பகுதிக்கான மிகை / நிலுவை | | (732,668.92) | (732,668.92) |
| 2014 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மீதி | 1,043,030 | 6,504,172.08 | 7,547,202.08 |

**காணி அமைச்சு**

**நில அளவைகள் சபை**

**2015 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான**

**நிதிப் பாய்ச்சல் கூற்று**

| விபரம் | குறிப்பு | 2015 | | 2014 | |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **நடைமுறைச் செயற்பாடுகளினால் நிதிப் பாய்ச்சல்கள்** | | | | | |
| மிகை/(பற்றாக்குறை) | | (732,668.92) | | 467,508.16 | |
| **நிதி அல்லாத அசைவுகள்** | | | | | |
| தேய்மானம் | | 144,847.27 | | 122,881.26 | |
| நிலையான வைப்புக்களின் வட்டி | | (476,087.06) | | (674,372.47) | |
| இடர் கடன் (அதிகரித்தல்)/குறைதல் | | 95,132 | | 70,120.00 | |
| விழா முற்பணம் அதிகரித்தல்)/குறைதல் | | 3,000.00 | | (1,000.00) | |
| கிடைக்கப் பெற வேண்டியவை (அதிகரித்தல்)/குறைதல் | | 93,166.73 | | 42,002.27 | |
| செலுத்தப்பட வேண்டியவை (அதிகரித்தல்)/ குறைதல் | | (125,786.63) | | 6,723.26 | |
| முன்னர் கிடைக்கப்பெற்ற அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் (அதிகரித்தல்)/ குறைதல் | | (18,750.00) | | (80,025.00) | |
| சேரல் செலவுகளின் (அதிகரித்தல்)/ குறைதல் | | (110,973.72) | | 48,597.56 | |
| செயலமர்வு வருமானத்தின் (அதிகரித்தல்)/ குறைதல் | | 151,900.00 | | | |
| மீளச் செலுத்துதலின் (அதிகரித்தல்)/ குறைதல் | | 8,350.00 | | | |
| உறுதியற்ற கணக்கின் (அதிகரித்தல்)/ குறைதல் | | - | | 8,819.71 | |
| அடையாளம் காணப்படாத வரவுகளின் (அதிகரித்தல்)/ (குறைதல் ) | | 53,650.00 | | | |
| **செயற்பாட்டு நடவடிக்கைளினால் தோன்றிய தேறிய நிதிப் பாய்ச்சல்** | | | (914,220.33) | | 11,254.75 |
| **முதலீட்டு நடவடிக்கைகளினால் தோன்றிய நிதிப் பாய்ச்சல்கள்** | | | | | |
| நிலையான வைப்புக்கள் | | (4,432,556.08) | | (1,625,898.39) | |
| நிலையான வைப்பு வட்டி | | 476,087.06 | | 674,372.47 | |
| நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் | | (294,316.50) | | (116,289.80) | |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளினால் தோன்றிய தேறிய நிதிப் பாய்ச்சல்கள்** | | | (4,250,785.52) | | 1,067,815.72 |
| **நிதி நடவடிக்கைகளின் மூலம் நிதிப் பாய்ச்சல்கள்** | | | | | |
| முன்னைய வருடத்தின் சீராக்கல்கள் திரண்ட நிதியத்திற்காக | | | (30,000.00) | | |
| காசு மற்றும் காசுக்கு சமனானவைகள் மொத்த அதிகரிப்பு/(குறைவு) | | | (5,195,005.86) | | (1,056,560.97) |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமனானவைகள் | | | 7,461,849.03 | | 8,518,410.00 |
| காலப்பகுதியின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமனானவைகள் | 1 | | 2,266,843.18 | | 7,461,849.03 |

**காணி அமைச்சு**

**நில அளவைகள் சபை**

**2015 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான கணக்குகளுக்கு உரிய குறிப்புக்கள்**

1 **காசு மற்றும் காசுக்கு சமனானவைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வங்கியில் உள்ள பணம் | | | | | 513,554.82 |
| கையிருப்பில் உள்ள பணம் | | | | | 0.60 |
| நிலையான வைப்புக்கள் | | | | | |
| தொடர் இலக்கம் | வங்கி | காலம் | கணக்கு இலக்கம் | பெறுமதி | |
| 1 | இலங்கை வங்கி, நாராஹேன்பிட்ட | 3 மாதங்கள் | 78402778 | 753,287.76 | |
| 2 | இலங்கை வங்கி, நாராஹேன்பிட்ட | 1 மாதம் | 77833331 | 500,000.00 | |
| 3 | இலங்கை வங்கி, நாராஹேன்பிட்ட | 3 மாதங்கள் | 77833540 | 500,000.00 | |
| | | | | | 1,753,287.76 |
| | | | | | 2,266,843.18 |

2 **கிடைக்கப் பெற வேண்டியவை**

கிடைக்கப் பெற வேண்டிய வட்டி வருமானம் 54,207.00

3 **இடர் கடன்**

ரீ.ஜீ. பிரணாந்து 127,275.00

4 **நிலையான சொத்துக்கள்**

| தொடர் இலக்கம் | வங்கி | காலம் | கணக்கு இலக்கம் | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| 1 | இலங்கை வங்கி, நாராஹேன்பிட்ட | 3 மாதங்கள் | 70070797 | 2,347,663.96 | |
| 2 | இலங்கை வங்கி, நாராஹேன்பிட்ட | 3 மாதங்கள் | 7256887 | 2,000,000.00 | |
| 3 | இலங்கை வங்கி, நாராஹேன்பிட்ட | 1 வருடம் | 71352120 | 1,536,039.51 | |
| 4 | இலங்கை வங்கி, நாராஹேன்பிட்ட | 1 வருடம் | 76670842 | 1,500,000.00 | |
| | | | | | 7,383,703.47 |

# காணி அமைச்சு

# நில அளவைகள் சபை

**5 –இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள்**

| விடயம் | 2015-01-01 திகதியன்று மீதி ரூ. | ஆண்டிற்குள் கொள்வனவு செய்தல் ரூ. | மொத்தம் ரூ. | தேய்மானம் % | வருடாந்தத் தேய்மானம் ரூ. | 2015.12.31 திகதியன்று தேறிய பெறுமதி |
|---|---|---|---|---|---|---|
| இயந்திர உபகரணங்கள் | 109,539.04 | 182,928.00 | 292,467.04 | 20 | 58,493.41 | *233,973.63* |
| தளபாடங்கள் | 147,411.90 | 60,439.50 | 207,851.40 | 10 | 20,785.14 | *187,066.26* |
| கணினிகள் | 131,673.75 | | 131,673.75 | 25 | 32,918.44 | *98,755.31* |
| அலுவலக உபகரணங்கள் | 37,532.25 | | 37,532.25 | 25 | 9,383.06 | *28,149.19* |
| நிஅச பெயர்ப் பதாகை | 52,641.60 | | 52,641.60 | 20 | 10,528.32 | 42,113.28 |
| கட்டிடங்கள் மற்றும் கருவிகள் | 38,220.00 | | 38,220.00 | 20 | 7,644.00 | 30,576.00 |
| கணக்குகளின் மென்பொருட்கள் | | 50,949.00 | 50,949.00 | 10 | 5,094.90 | 45,854.10 |
| **மொத்தம்** | 517,018.54 | 294,316.50 | 811,335.04 | | 144,847.27 | 666,487.77 |

**6 சேரல் செலவுகள்**

| தொடர் இலக்கம். | செலவுகள் | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| 1 | தொலைபேசிக் கட்டணங்கள் | 6,338.84 | |
| 2 | நிருவாகக் குழு உறுப்பினர்களுக்கான செலவுகள் | 11,000.00 | |
| 3 | பயிற்றப்பட்ட ஊழியர் கட்டணங்கள் | 13,500.00 | |
| 5 | கணக்காய்வுக் கட்டணங்கள் | 186,321.00 | |
| | | | **217,159.84** |

**7 நிலையான வைப்புக்களின் வட்டிகள்**

| **தொடர் இலக்கம்.** | **வைப்பு இலக்கம்** | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| 1 | 70070797 | 114,273.72 | |
| 2 | 7256887 | 99,371.04 | |
| 3 | 76670842 | 87,802.00 | |
| 4 | 71352120 | 84,892.12 | |
| 5 | 74176142 | 47,237.15 | |
| 6 | 75333664 | 18,779.84 | |
| 7 | 77833540 | 10,248.54 | |
| 8 | 77833331 | 6,903.77 | |
| 9 | 78402778 | 125.00 | |
| 10 | 78087838 | 3,166.12 | |
| 11 | 78202123 | 3,287.76 | |
| | | | **476,087.06** |

**8 ஏனைய வருமானங்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளமற்ற விடுமுறைகள் | 4,886.13 | |
| வெளிவாரியான பாடநெறிகளின் வருமானங்கள் | 20,800.00 | |
| தண்டக் கட்டணங்கள் | 25,000.00 | |
| தகவல்களை வழங்குவதற்கான அறவீடுகள் | 54,200.00 | |
| ஊழியர் கடன் வட்டி | 8,491.56 | |
| | | **113,377.69** |

**9 சம்பளங்கள் மற்றும் வேதனங்கள்**

| | |
|---|---|
| சம்பளங்கள் மற்றும் | 605,644.84 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | வேதனங்கள் | | | | |
| | | ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்புத் தொகை | | 158,708.85 | | |
| | | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பங்களிப்புத் தொகை | | 39,677.21 | | |
| | | | | | | **804,030.90** |
| **10** | **ஏனைய கொடுப்பனவுகள்** | | | | | |
| | | வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | | 280,800.00 | | |
| | | விஷேட கொடுப்பனவு | | 118,380.97 | | |
| | | இடைக்காலக் கொடுப்பனவு | 315,000.00 | | | |
| | | பயிற்றப்பட்ட ஊழியர்களுக்கான கொடுப்பனவு | 140,248.00 | | | |
| | | தலைவருக்கான கொடுப்பனவு | 362,500.00 | | | |
| | | உப தலைவருக்கான பணிக் கொடுப்பனவுகள் | 290,000.00 | | | |
| | | பதிற்கடமைச் செயலாளரின் பணிக் கொடுப்பனவுகள் | 115,590.00 | | | |
| | | கணக்காளரின் பணிக் கொடுப்பனவுகள் | 68,805.00 | | | |
| | | நி.அ.ச. உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் | 541,200.00 | | | |
| | | கணக்காய்வுக் குழு உறுப்பினர்களின் கொடுப்பனவுகள் | 95,200.00 | | | |
| | | | | | **2,327,723.97** | |
| **11** | **<u>விநியோகங்கள்</u> ஏனையவை** | | | | | |
| | | கணக்காய்வுக் கட்டணங்கள் | 100,000.00 | | | |
| | | அச்சுப்பதிப்பு மற்றும் புத்தகம் கட்டுதல் | 129,609.00 | | | |
| | | அறிவித்தல்கள் | 79,759.05 | | | |
| | | ஊழியர் பயிற்சிப் பாடநெறிக் கட்டணங்கள் | 49,000.00 | | | |
| | | லெமினேட்டிங் | 13,395.00 | | | |
| | | | | | **371,763.05** | |

## காணி அமைச்சு

## நில அளவைகள் சபை

### 2015.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான
### பொதுக் கணக்கீட்டுக் கொள்கைகள்

1. பொதுக் கணக்கீட்டுக் கொள்கைகள்

1.1. தயாரிப்பதன் அடிப்படை

இலங்கை அரச துறையின் கணக்கீட்டுத் தரப்படுத்தல் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும்.

1.2. நிதிக் கூற்றுக்கள் சேரல் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு உள்ளன.

1.3. நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ரீதியான செலவுகளின் ஏற்றுக் கொள்ளலின் அடிப்படையில் தயாரிக்கப்படும்.

**2.** சொத்துக்களை மதிப்பீடு செய்வதன் அடிப்படை

2.1. நிலையான சொத்துக்கள் வெட்டி நீக்கப்பட்ட பெறுமதியில் குறிப்பிடப்பட்டு உள்ளது

2.2. தேய்மானம்

நிலையான சொத்துக்கள் தேய்மானம் குறைந்து செல்லும் மீதிகள் முறையின் கீழ் கடந்த வருடத்திற்கு ஒத்தியங்கும் வகையில் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள சதவிகிதத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டு உள்ளது.

| சொத்துக்களின் வகை | தேய்மானங்கள் % |
|---|---|
| இயந்திர உபகரணங்கள் | 20 |
| தளபாடங்கள் | 10 |
| கணினிகள் | 25 |
| அலுவலக உபகரணங்கள் | 25 |
| பெயர்ப் பதாகை | 20 |
| கட்டிடங்கள் மற்றும் கருவிகள் | 20 |
| கணக்குகளின் மென்பொருள் | 10 |

# 11. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

මගේ අංකය / எனது இல. / My No. } ஏஜீஎல்/பீ/எல்எஸ்சீ/01/15/03   ඔබේ අංකය / உமது இல. / Your No. }   දිනය / திகதி / Date } 2016 நவம்பர் 16

தலைவர்,

நில அளவைச் சபை.

**நில அளவைச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

நில அளவைச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவைச் சபை அதிகாரச்சட்டத்தின் 57(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை சபையின் தலைவருக்கு 2016 மே 04 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நில அளவைச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டு கொள்கைகள்

ஊழியர் பணிக்கொடை தொடர்பாக சபையினால் கணக்கீட்டுக் கொள்கையொன்று இனங்காணப்படாதிருந்ததுடன், ஊழியர் பணிக்கொடைக்காக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக்கு நேரடியாக செலவு வைக்கப்பட்ட மொத்தம் ரூபா 53,650 இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.2.3 தொங்கல் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 8,820 தொகையான தொங்கல் கணக்கின் மீதி 02 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவை அதிகாரச்சட்டம் | |
| (i) 12(1) ஆம் பிரிவு | பதிவு செய்யப்பட்ட அனுமதிப் பத்திரத்தையுடைய நிலஅளவையாளரொருவரால் தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட குறித்த வகைகளில் ஆரம்ப திட்ட வரைபடம் அல்லது வரைபடத்தின் பிரதிகள் தரவுத் தளமொன்றை தாபிப்பதற்காக வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 43(1) மற்றும் (2) ஆம் பிரிவு | சபையினால் சகல பதிவுசெய்யப்பட்ட அனுமதிப்பத்திரத்தையுடைய நிலஅளவையாளர்களின் பெயர்பட்டியலொன்றை வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் பதிவு செய்யப்பட்ட அனுமதிப்பத்திரத்தையுடைய 1,047 நிலஅளவையாளர்கள் இருந்தும், 2015 மார்ச் 27 ஆந் திகதிய 1908 ஆம் இலக்க வர்த்தமானியில் பதிவுசெய்யப்பட்ட அங்கீகாரம்பெற்ற 992 நில அளவையாளர்களின் பெயர்கள் மாத்திரம் வெளியிடப்பட்டிருந்தன. |
| (ஆ) கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 1.3.2 ஆம் பந்தி | கொள்வனவு ஏற்பாடுகளுக்கு முரணாக பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்ட 02 செயலமர்வுகளுக்காக மண்டபக் கட்டணங்கள் மற்றும் பகல் உணவு என்பவற்றிற்காக முறையே ரூபா 209,540 மற்றும் ரூபா 574,350 செலவிடப்பட்டிருந்தன. |

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் சபையின் நிதி விளைவுகள் ரூபா 732,669 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 467,508 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 265,161 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் செயலமர்வு வருமானம் ரூபா 1,105,500 ஆல் அதிகரித்திருந்த போதிலும், ஏனைய வருமானம் 1,353,307 ஆல் குறைவடைந்தமை மேற்படி வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை தளம்பலுடன் கூடிய நிதி மிகையொன்று காண்பித்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் போது அது ரூபா 732,669 ஆன பற்றாக்குறையொன்றாக மாறியிருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற் கொள்ளும் போது 2011 ஆண்டின் போது ரூபா 2,471,638 ஆன பங்களிப்பு தளம்பலுடன் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 2,546,395 ஆக இருந்தது.

3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக்கூற்றின் பிரகாரம் சபையின் நடைமுறை விகிதம் 2015 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே 0.83 மற்றும் 2.6 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது நடைமுறை விகிதம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. இதற்காக மீளாய்வாண்டின் போது காசு மற்றும் காசுக்கு சமமானவைகளில் ரூபா 5,195,006 ஆல் குறைவடைந்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது. நடைமுறைச் சொத்துக்களில் 2015 ஆம் ஆண்டின் போது 93 சதவீதமும் 2014 ஆம் ஆண்டின் போது 95 சதவீதமும் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றையே பிரதிநிதித்துவப்படுத்தியிருந்ததுடன், சபையின் பாரியளவு சொத்துக்கள் திரவச் சொத்துக்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

அளவை தொழில் மற்றும் அதன் பிரயோகம் என்பவற்றை முறையாக பேணுவதாகவும், தொழில்துறையினர் எதிர்பார்க்கும் தொழில்நுட்ப ஒழுங்குகள் மற்றும் நெறிமுறைகள் நியமங்களுக்கு இணங்கும் வகையில் பயிற்சியொன்றோ அல்லது கல்வியோ தொழில்துறையில் நுழைபவர்களுக்கு கிடைப்பதாகவும் அதனால் தொழில்துறையில் ஈடுபடுபவர்களினால் தொழிலின் நிலைத்திருதன்மை உயர் நியமங்களை பேணிச் செல்வதனையும் உறுதிப்படுத்தல் 2002 இன் 17 ஆம் இலக்க நிலஅளவைச் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சபையின் நோக்கங்களாகும்.

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், கருமங்களை நிறைவேற்றுவதன் செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் தீர்ப்பதற்கு இருந்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 105 ஆக இருந்த போதும் ஆண்டின் போது தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் 64 அதாவது 61 சதவீதமாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், சபையினால் 6 தொழில்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 03 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

(இ) சுயேட்சையான உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்காக சமூக பாதுகாப்பு முன்மொழிவுத் திட்டமொன்றை தாபித்தல், நலன்புரி மற்றும் விளையாட்டு வசதிகள் வழங்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் நடவடிக்கைகளை நிர்வகிப்பது தொடர்பாக தேவையான விதிகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அந்நியதியின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(உ) வருடாந்த அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதற்கு உரித்துள்ள சகல நிலஅளவையாளரும் நில அளவை அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும். வருடாந்த அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாமல்

நிலஅளவைத் தொழில்துறையில் ஈடுபடும் நபர்களை இனங்காண்பதற்கோ அல்லது அவ்வாறான நடவடிக்கைகளை தடுப்பதற்கோ சபையினால் சட்ட விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 **முகாமைத்துவ செயற்பாடுகள்**

சபையின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டின் பின்னர் நிலஅளவையாளர் ஒருவர் சபையில் பதிவுசெய்யும் போது அறவிடப்படுகின்ற ரூபா 3,500 தொகையான பதிவுக் கட்டணங்களும் 2010 ஆம் ஆண்டின் பின்னர் வருடாந்த அனுமதிப்பத்திரங்களுக்காக நிலஅளவையாளர் களிடமிருந்து அறவிடப்படுகின்ற ரூபா 2,500 தொகையான கட்டணங்களும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

4.3 **பதவியணியனர் நிர்வாகம்**

நிலஅளவை அதிகாரச்சட்டத்தின் 38(இ) பந்தியின் பிரகாரம் சபையின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக போதியளவு உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் நியமிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி அளவிலும் சபைக்கு இரண்டு எழுதுனர்களும் ஒரு அலுவலக உதவியாளரும் மாத்திரமே ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை, முறைப்பாடுகளை தீர்வு செய்தல் மற்றும் கோவைகளை நாளதுவரையாக்கல் நடவடிக்கைகளுக்கு தடையாக இருந்தன.

5. **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

5.1 **கணக்காய்வுக் குழு**

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் 03 மாதங்களுக்கு ஒருமுறை கணக்காய்வு குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் முதல் அரையாண்டின் போது எவ்வித கூட்டத்தையும் நடாத்தாமல் இரண்டாவது அரையாண்டின் போது நான்கு கூட்டங்களும் நடாத்தப்பட்டிருந்தன.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட வருமானங்களையும் செலவினங்களையும் உள்ளவாறான வருமானங்களுடனும் செலவினங்கங்களுடனும் ஒப்பிடும் போது 04 வருமானத் தலைப்புக்களில் 06 செலவின விடயங்களில் 11 சதவீதம் முதல் 19 சதவீதத்திற்கிடையே முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 5.3 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்

2009 ஆம் ஆண்டின் சனவரி மாதம் முதல் சபையின் செயலாளர் பதவி வெற்றிடமாக காணப்படுவதுடன் அப்பதவிக்காக உத்தியோகத்தரொருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2012 யூலை 05 ஆம் திகதி பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவால் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் அப் பதவியை நிரப்புவதற்கு கணக்காய்வுத் திகதியான 2016 மார்ச் 31 வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2014 ஆம் ஆண்டின் சபையின் ஆண்டறிக்கை 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.5 சமூகப் பொறுப்பை நிறைவேற்றல்

அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர்களால் அளவிட்டு தயாரிக்கப்பட்ட திட்ட வரைபடம் பொது மக்களுக்கு பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அவற்றின் பிரதிகளை நில அளவைச் சபைக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | முறையாக பேரேட்டுக் கணக்குகள் பராமரிக்கப்படாமை காரணமாக கணக்குகளில் தொங்கல் மீதியொன்று காணப்பட்டமை. |
| (ஆ) வருமானக் கட்டுப்பாடு | கட்டணங்கள் திருத்தம் செய்யப்பட்டிருக்க வில்லை. |

ஒப்பம்: எச்.எம்.காமினி விஜேசிங்ஹ

கணக்காய்வாளர் தலைமை அதிபதி